ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட்டு மாதம் 6ம் தேதி ஆண்டவரின் உருமாற்ற விழாவைக் கொண்டினாலும், முப்பெரும் பாஸ்கா விழாக் கொண்டாட்டத்திற்கான தவக்கால தயாரிப்பாக ஆண்டவரின் உருமாற்ற மறைபொருள் மீண்டும் கூறப்படுகிறது. கிறிஸ்துவின் பணியில் அது முக்கியமான நிகழ்வைக் குறிப்பதாலும், சிலுவைப்பாதையில் கிறிஸ்துவுடன் செல்ல விரும்புபவர்களுக்கு நம்பிக்கையைத் தருவதாலும் தவக்காலத்தில் ஆண்டவரின் உருமாற்றம் இடம் பெறுகிறது.

'நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?' என்ற கிறிஸ்துவின் கேள்விக்கு பேதுரு அளிக்கும் பதிலை அடுத்து, எல்லா மூன்று ஒத்தமை நற்செய்தி புத்தகங்களிலும் ஆண்டவர் உருமாற்றம் இடம் பெறுகிறது. 'நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்' என பேதுரு உரைத்தப் பதில், சீடர்களுக்கும் இயேசுவிற்கும் இடையிலான உறவில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. நான் ஒரு 'போதகர்' அல்லது 'தலைவர்' எனக் கூறுவதை இயேசு நிறுத்திக் கொண்டார். எதிர்பார்க்கப்படும் மெசியா, கடவுளால் ஆசிக்கப்பட்டவர் என பழைய ஏற்பாட்டில் முன்னுரைத்தது போல இறைமக்கள், இஸ்ராயேலை மீட்க வருபவர் அவரே என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனால், தமது முழு தன்மையையும் கிறிஸ்துவின் எதிர்பார்ப்பையும் அவர்கள் முழுமையாக அறிந்தவர்கள் இல்லை என்பது இயேசுவிற்குத் தெரியும்.

இதனை அடுத்தே, இயேசு தமது மரணம் குறித்தும், மீட்பின் அர்த்தம் குறித்தும் மெசியா பற்றிய உலகக் கருத்திற்கு மாறான உண்மையான அர்த்தம் அல்லது ரகசியம் குறித்தும் தமது சீடர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இயேசு ஒரு சாதாரண மனிதனல்ல, சாதாரண 'கடவுள் மகன்' அல்ல, இயேசு அவரே கடவுள், அவரை அனுப்பி தந்தைக்குச் சமமானவர் என்ற உண்மை வெளிபாடுகள் தெளிவானது, ஆண்டவர் உருமாற்றத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்ற மனித அடிமைத்தனத்தை தமது மரணத்தால் போக்க வந்த, இறைமைந்தன், நித்திய மாட்சிமையின் அரசுக்கு விசுவாசத்தோடு அவரைப் பின்பற்றும் அனைவருக்கும் மரணத்தின் வழி வாழ்வளித்தவர். அவரது சீடர்கள் இவற்றை எல்லாம் அறிந்து கொள்ள முடியவில்லை. மரண வாசலுக்கு இயேசு இழுத்துச் செல்லும் வரை அவர்கள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை. ஈஸதர் ஞாயிற்றுக்கிழமையன்று அவர்களில் பெண் ஒருத்தி, கல்லறை காலியான அதிர்ச்சிச் செய்தியை விரைந்து கொண்டு வந்த போது அவர்களுக்குப் புரியவில்லை. '...அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சிமையைப் பெற்றிருக்கிறார்' (யோவான் 1:14) என இதே சீடர்கள் நமக்குச் சாட்சியம் பின்னர் சாட்சியம் பகர்ந்துள்ளனர். அவர்கள் புரிந்து கொண்டனர் என்பதற்கு மெசியா ரகசியம் பற்றிய அவர்களின் அறிக்கையே சாட்சி. கிறிஸ்து வழங்கும் மீட்பு குறித்து நாம் ஐயம் கொள்ளக்கூடாது என்பதற்காக நம்மிடையே அவர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

ஞானம் பெற்றவர்களின் கண்கள் வழி காண்பதற்கு நாம் பேறு பெற்றவர்கள். 'என் அன்பார்ந்த மைந்தர் இவரே' (மாற்கு 9:7) என நாம் ஒவ்வொருவரிடமும் தந்தையின் குரல் ஒலிக்கிறது. ஆண்டவர் உருமாற்றம் நிகழ்நத இரவில் அவரது மாட்சிமை வெளிப்படுத்தப்பட்டது. எருசலத்தின் மரணப் பாதையில் கிறிஸ்துவின் குரலுக்கு செவி கொடுக்கா விட்டால், ஈஸ்தர் மகிழ்ச்சியை உணருவது சற்று சிரமமே. தவக்காலம் இல்லாமல் ஈஸ்தர் இல்லை, அதே போல், இயேசு உருமாறிய மலையை அல்லாமல் கொல்கோத்தா மலையில் ஈஸ்தரன்று கிடைத்த கிறிஸ்துவின் வெற்றியை மறந்து விடுவதும், எளிதல்ல.

தவக்காலத்தில் நாம் பயணம் செய்யும் போது, நமது அன்றாட சிலுவையைத் தூக்கிக் கொண்டு, அவரது சீடர்களுடன் சாட்சியம் பகர, கிறிஸ்துவின் போதனையை செவிமெடுப்போம். கிறிஸ்து பகிர்ந்து கொண்ட மாட்சிமைக்கு விலை கொடுக்க வேண்டியிருந்தது. இந்த வாழ்வில் சிலுவையைச் சுமக்கும் வேளையில் நமது ஆன்மாவிற்கு உருமாற்ற நிகழ்வு உறுதியளித்தது, அவரது மாட்சிமையின் லட்சியம் நமது ஊக்கமின்மைக்கு மருந்தாக அமையட்டும். கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு கொள்வது, நமக்காகவும் அவரை நாடுவோருக்காகவும் வழங்கிய மீட்புப் பணியில் பங்கு கொள்வதாகும். திருதந்தை பெரிய சிங்கராயர் கூறியது:

'பாடுகளின்றி மாட்சிமையின் அரசு இல்லை என்பதால், வாழ்க்கையின் போராட்டத்தில் பொறுமை காத்து, மகிழ்ச்சியின் வாக்குறுதியில் நம்பிக்கை கொள்வதில், ஆண்டவரின் முன்மாதிரியைப் பின்பற்றுமாறு விசுவாசிகள் அழைக்கப்படுகின்றனர்' ✝

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 08/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

25 பெப்ரவரி 2018
தவக்காலம் 2ம் ஞாயிறு



# நம்பிக்கை தரும் குரலுக்கு செவிகொடு

# மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 மார்ச் (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*

***கிறிஸ்துவில் மறைத்தூதுப் பணிக்கு பேரார்வம்***

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: தவக்காலம் 2ஆம் ஞாயிறு: (ஆண்டு இரண்டு) சனி 24-02-2018 ஞாயிறு 04-03-2018**

**தொ.நூ 22: 1-2, 9a, 10-13, 15-18 தி.பா 115: 10 et 15, 16 – 17, 18-19 உரோ 8: 31b-34 மாற்கு 9: 2-10**

**உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன் ( தி. பா 115 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 24 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித தெரேசா – கல்கத்தா) | |
| ஞாயிறு | 25 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா | திருப்பலி (தமிழ்) (புனித யூட்)<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு.லொறென்ஸோன் றூய்ஸ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>**திருப்பலி (தே.மொ) நடைபெறாது** | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் )<br>**மா 3.00 மணி கிறிஸ்தவ புகுமுக வேட்பாளர்களின் தேர்வுச் சடங்கு – காஜாங்** |
| திங்கள் | 26 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 27 | கா.திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணிக்கு திருப்புகழ்மாலை, திருப்பலி தொடர்ந்து ஒப்புரவு அருள் அடையாளம்*** |
| புதன் | 28 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.45 மணிக்கு அதிச ஒருங்கிணைப்புக் குழு ஒன்றுகூடல்*** |
| வியா | 01 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 02 | கா.திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.00 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் தொடர்ந்து திருப்பலியும் (ஆ / த /சீ /தே.மொ)*** |

**தவக்காலம் 3ஆம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

**வி.ப 20: 1-17 தி.பா 18: 8-9, 10-11 1 கொரி 1: 22-25 லூக் 2: 13-25**

**ஆண்டவரே, நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன. ( தி. பா 18 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 03 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித பௌஸினா) | |
| ஞாயிறு | 04 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 ம | திருப்பலி (தமிழ்) (புனித அந்தோணி)<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித ரப்பீல்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**இன்று திருப்பலியை வழி நடத்திய புனித யூதா ததேயு அதிச மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்**

**2018 பெப்ரவரி (மாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை**
17/18 பெப்ரவரி 2018 - ரிம: 11,928.05
16-02-18 சீன புத்தாண்டு ரி.ம: 4,724.35 தித்தி ரி.ம: 598.00
9-11 பெப்ரவரி 2018 (சாகா திருவிழா) ரி.ம: 2,280.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

- **மினவுதல் தேவாலய வின்செண்ட் டி போல் இயக்கத்தினர்:** ஏழைகளுக்கும், உதவி தேவைப்படுவோர்க்கும் ஆர்வத்தோடும் பணி செய்ய இன்னும் அதிகமான தன்னார்வலர்களைத் தேடுகின்றனர். உங்களுக்கு ஆர்வமிருந்தால் பங்கு அலுவலகம் அல்லது லூயிஸ் (019-622 7440) அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் இவர்களின் பணிக்கூட்டம் மாதத்தின் முதல் செவ்வாய் அன்று மாலை 4-6 மணி வரை ஆலய உணவு விடுதியில் நடைபெறும்.
- **ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருப்போம்** சுவர்களில் ஆணி அடித்தல், பசை சுவரொட்டிகள் ஒட்டுதல், ஆகியவற்றைத் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்கிறோம். ஆலயம் இறைவன் தங்கும் இல்லம், எனவே எப்போதும் தூய்மையைக் கடைப்பிடிப்பது நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை உறுதி செய்வோம்.

**2018 ஆம் ஆண்டின் தவக்காலத்தில் ஒப்புரவாகுவோம்.**

பிப் 28 (புதன்) மாலை 7.00 இரக்கத்தின் ஆண்டவர், ஷா அலாம்
மாலை 7.30 புனித கிறிஸ்டோபர் ஆலயம், கெமாஸ்
மார்ச் 01 (வியா) இரவு 8.00 ஜீசஸ் கரிடாஸ், கெப்போங்
மார்ச் 05 (திங்) மாலை 7.30 புனித இக்னேசியஸ், பெ.ஜெ
மார்ச் 06 (செவ்) இரவு 8.00 கிறிஸ்துஸ் அமான்,
இரவு 7.30 அமல உற்பவ ஆலயம், போர்டிக்சன்
மார்ச் 07 (புதன்) இரவு 8.00 புனித சூசையப்பர், செந்தூல்
இரவு 7.30 புனித அலோசியஸ் ஆலயம்மந்தின்
மார்ச் 08 (வியா) இரவு 8.00 குவாடலுப்போ, பூச்சோங்
மாலை 7.30 புனித ஜோன் மரி வியான்னி,தம்பின்

**கிறிஸ்துவ புகுமுக வேட்பாளர்களின் தியானம்:** (ஆங்கிலம் & தேமொழி) மார்ச் 10-11, 2018. போர்ட்டிக்சனில் நடைபெறும்.இவர்களை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

**மரியாயின் சேனை(லிஜீயோ மரி)** மார்ச் 18,2018 (ஞாயிறு) பகல் 2.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும்.

**சோய்ஸ் - ஆங்கிலத்தில்** ஏப்ரல் 13-15, 2018
தொடர்புக்கு: கிரேஸ் ( 012-350 9817) ப்ரண்டன் (017-619 7834)

**திருப்பலி -** அருள்தந்தை இக்னேசியஸ் ஹுவான் எழுதிய புத்தகத்தை வாங்க விரும்புவோர் இந்த அகப்பக்கத்தில் முன்பதிவு செய்துகொள்ளலாம்/

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**
அ) பேட் ரிக் சார்ல்ஸ் பெலிக்ஸ் (இறப்பு: 13/02/18)
ஆ) ரெஜினா சுவாமிநாதன்(இறப்பு18/02/18)
**முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

- **இத்தவக்காலத்தின் நான் என்ன செய்ய முடியும்?**
  - 2018 தவக்காலத்தின் செய்தியை வாசியுங்கள்.
  - அகப்பக்கத்திற்குச் சென்று கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். (lent.aohd.org)(www.facebook.com/Lenten campaign)
- **2018 ஆம் ஆண்டின் தவக்காலக் கருப்பொருள்:** நம்முடைய பொது இல்லமான பூமியைப் பாதுகாப்போம். **சுற்றுச்சூழல் மாற்றத்தின் பணியாளர்கள் நாம். இந்த இல்லம் நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசா?**
  - நமது இல்லம், நமது பூமி. அதில் நிறைந்துள்ள அழகு அனைத்தும், கடவுள் நமக்குத் தந்த பரிசு.
  - நமது இல்லம் இப்போது எப்படிக் காட்சியளிக்கிறது? இந்தப் பூமியை நாம் அன்போடு பார்த்துக்கொள்ளாத காரணத்தால் அது இப்பொழுது வலியால் அழுது கொண்டிருக்கிறது.
- **மருத்துவ முகாம் மற்றும் இரத்த தானம்-** பங்கு மனித வள மேம்பாட்டுக்குழு/கத்தோலிக்க மருத்துவர்கள் சங்கம் /சிரம்பான் பொது மருத்துவமனை இனைந்து நடத்துகிறார்கள்.
  - நாள்: 18-03-2018(ஞாயிறு) காலை 8.00 - பகல் 3.00 வரை மினவுதல் மாதா தேவாலய மண்டபம்
  - **மருத்துவ முகாம்:** மருத்துவர்கள் மற்றும் தாதியர்களை இவர்களோடு இணைந்து உதவி செய்ய அழைக்கிறோம். தொடர்புக்கு: பெட்ரிசியா (012-2026 528) அல்லது பங்கு அலுவலகம்
- **சூப் கிச்சன்:** தவக்காலத்தில் உங்களுடைய ஒரு மணி நேரத்தை என்னோடு செலவிட விருப்பமா?
  - ஒவ்வொரு செவ்வாய் கிழமை காலை 9.30 - 11.30 வரை ஏழைகளோடு, பசித்திருப்போர், வீடின்றி இருப்போரோடு உங்களுடைய நேரத்தைப் பயன்படுத்துங்கள்.
  - **வீதியில் இருப்போருக்கு உணவளித்தல்** பங்கு இளைஞர் குழு பங்கெடுப்பு: 02'03/2018 வெள்ளி இரவு 9.00 மணி அனைத்து இளைஞர்களும் பங்கு உணவு விடுதியில் ஒன்று கூடவும்.
  - **மினவுதல் தேவாலய உணவு விடுதி** ஏழைகளுக்கு உணவளிக்கவும், பங்கு ஒன்றுகூடுதலுக்கும் பயனுள்ள வகையில் மிகவும் சிறப்பாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிதிஉதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நமது நன்றிகள்.
- **உதவி தேவைப்படுவோருக்கு உதவுங்கள்:** உணவுப் பொருட்களை தானம் செய்யுங்கள் (உ.ம்:அரிசி, சீனி. கோதுமைமாவு, எண்ணெய்) பங்கு அலுவலகத்தில் சேர்ப்பிக்கவும். நன்றி.
- **சிலுவைப் பாதை பக்தி முயற்சியில் ஈடுபடுவோம்.**
  02/03/2018 -வட்டார அளவில் - தேசத்தைக் கட்டியெழுப்புவோம்
  09/032018 -அதிச அளவில் - ஒற்றுமை
  16/03/2018 - குடும்ப அளவில் - மன்னிப்பு
  23/03/2018 - தனிப்பட்ட ரீதியில் - உண்ணா நோன்பு மற்றும் செபம் - திருத்தந்தையின்கருத்துகளுக்காக)
  30/03/2018 - புனித வெள்ளி - பங்கு இளைஞர்கள் வழிநடத்தும் செப நடை - மெழுகுத்திரி பவனி சிறையிலிருப்போருக்காக.
- **தவக்கால உறைகள்:** உங்களுடைய தவக்கால காணிக்கையைச் செலுத்துங்கள். உறைகள் ஆலய நுழைவாயில் வைக்கப்பட்டுள்ளது.
- **தமிழில் முதல் முறையாக விவிலிய-இறையியல் உருவாக்கப் பயிற்சி** நாள்: 10-03-2018 நேரம்: காலை 9.00 - 4.00 வரை இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம். கட்டணம் ரிம:20.00 தொடர்புக்கு: ரீத்தா சேவியர் (012 918 1620) - விவிலியப் பணிக்குழு
- **சோய்ஸ் தமிழ் :** 6–8 பெப்ரவரி 2018 APC கோலாலும்பூர், கட்டணம் ரி.ம 130, தொடர்புக்கு : ரெய்மண்ட் பன்னீர்செல்வம் 016 689 4257